## ஐரோப்பிய மறுமலர்ச்சிகால ஓவியங்கள்

01) மறுமலர்ச்சிகால ஓவியர்களைக்குறிப்பிடுக?

- ❖ லியனா டோடாவின்சி
- ❖ மைக்கலாஞ்சலோ
- ❖ றாபாயெல்சன்சியோ

02) லியனாடோடாவின்சி ஓவியக்கலை தவிர்ந்த வேறு எத்துறைகளில் தேர்ச்சி பெற்றவர்?

சங்கீதம், பொறியியல் கட்டடநிர்மானத்துறைகளில்

03) லியனாடோ டாவின்சியின் ஓவியங்களைக்குறிப்பிடுக?

- ❖ பாறைமேல்கன்னி
- ❖ இறுதிராப்போசனம்
- ❖ மொனலிசா

04) அருகில் உள்ள ஒளிப்படத்தை அவதானித்து கீழ்வரும் வினாக்களிற்கு விடைதருக.



இனங்காண்க – பாறை மேல் கன்னி

வரைந்த கலைஞர் - லியனாடோடாவின்சி

கன்னி மரியாளின் முகத்தில் - காருண்யம் காணப்படுகின்றது

இச்சித்திரத்தில் காணப்படும் பண்புகள்?


தூரதரிசனம் ஒளிநிழல்

இவரது வர்ணந்தீட்டல் நுட்பமுறையை எவ்வாறு அழைப்பர்?

கியுரெஸ்கியுரோ

தற்சமயம் இவ்வோவியம் காணப்படும் இடம்?

லண்டன் நகரிலுள்ள நூதனசாலையில்



மேலே உள்ள ஒளிப்படத்தை அவதானித்து வினாக்களிற்கு விடைதருக?

05) இவ்விவோவியத்தை வரைந்த கலைஞர் யார்?

லியனாடோடாவின்சி

இவ்வோவியம் எங்கு வரையப்பட்டுள்ளது?

மிலானை சேர்ந்த மரியாடொலா கிரசி டொமினிக்கன் துறவிகளின் இல்லச்சுவரில்

இவ்வோவியம் வரையப்பட்ட நுட்பமுறை யாது?

டெம்பராமுறையில்

இவ்வோவியத்தின் மத்தியிலும் இருபுறமும் வரையப்பட்டுள்ளவர் யார்?

இயேசுநாதரும்,இருபுறமும் பன்னிரு அப்போஸ்தலர்களும்

இவ்வோவியத்தின் ஊடாக வெளிப்படுத்தப்படும் உணர்வு வெளிப்பாடு யாது?
பரபரப்பு,குற்றஉணர்வு,சோகம்
இவ்வோவியத்திற்கு பயன்படுத்தப்பட்டுள்ள வர்ணங்கள் எவை?
கபிலவர்ணம்

**அருகில் உள்ள ஒளிப்படத்தை அவதானித்து வினாக்களிற்கு விடைதருக**



06) உலகப்புகழ் பெற்ற இவ்வோவியத்தின் பெயர் என்ன?
மொனலிசா
இவ்வோவியம் எங்கு வைக்கப்பட்டுள்ளது?
பிரான்ஸ் நாட்டில் லூவர் நூதனசாலையில்
இவ்வோவியம் வரையப்பட்ட ஊடகத்தின் பெயர் என்ன?
மரப்பலகை(பொப்லர்)
இவ்வோவியத்திற்கு பயன்படுத்தப்பட்டுள்ள வர்ண ஊடகம் எது?
எண்ணெய்வர்ணம்
இவ்வோவியத்தில் காட்டப்பட்டுள்ள பண்புகளை குறிப்பிடுக?
தூரதரிசனம், ஒளிநிழல் மென்மையான புன்னகை,
இவ்வோவியம் வெளிப்படுத்தும் உணர்வு யாது?
புன்னகை(மகிழ்ச்சி)

07) மைக்கல் அஞ்சலோவால் படைக்கப்பட்ட சிற்பங்களை குறிப்பிடுக?

- பியட்டா டேவிட்
- மோசஸ் இறக்கும் அடிமை
- கலகக்கார அடிமை புருகஸ் அன்னைமரியாள்

08) மைக்கல் அஞ்சலோவால் வரையப்பட்ட ஓவியத்தை குறிப்பிடுக.
இறுதித்தீர்ப்பு



**அருகில் உள்ள ஒளிப்படத்தை அவதானித்து வினாக்களிற்கு விடைதருக**

09) இச்சிற்பத்தை ஆக்கிய கலைஞர் யார்?
மைக்கல் அஞ்சலோ
10) இச்சிற்பத்தின் பெயர் என்ன?
பியட்டா
11) சிறுவையில் மரணித்துக்களையப்பட்ட யேசுபிரானின் உயிரற்ற உடலை மணிடியில் தாங்கியுள்ளவர் யார்?
அன்னை மரியாள்
12) இச்சிற்பம் ஆக்கப்பட்ட ஊடகம் யாது?
சலவைக்கல்
13) தற்போது எங்கு வைக்கப்பட்டுள்ளது?

ரோமாபுரியில் புனித பீற்றர் தேவாலயத்தில்

14) இச்சிற்பத்தின் ஊடாக வெளிப்படுத்தப்படும் உணர்வு யாது?
சோகம், வேதனை

**அருகில் உள்ள ஒளிப்படத்தை அவதானித்து வினாக்களிற்கு விடைதருக**



15) இச்சிற்பத்தின் பெயர் என்ன?
டேவிட்

16) இச்சிற்பத்தினை ஆக்கிய கலைஞர் யார்?
மைக்கல் அஞ்சலோ

17) இச்சிற்பம் ஆக்கப்பட்ட ஊடகம் யாது?
சலவைக்கல்.

18) இச்சிற்பத்தின் உயரம் யாது?
14 அடி

19) இச்சிற்பத்தின் ஊடாக வெளிப்படுத்தப்படும் பண்புகள்?
வலிமை, துணிவு, மானுடஇரக்கம்

**அருகில் உள்ள ஒளிப்படத்தை அவதானித்து விடைதருக.**



20) இவ்வோவியத்தை வரைந்த கலைஞர் யார்?
மைக்கல் அஞ்சலோ

21) இவ்வோவியம் வெளிப்படுத்தும் கருத்து யாது?
ஆதாமைப்படைத்தல்

22) இவ்வோவியம் வரையப்பட்ட இடம்?
உரோமபுரியில் சிஸ்ரையின் தேவாலயத்தில்

23) இவ்வோவியம் வரையப்பட்ட நுட்பமுறை யாது?
பிரெஸ்கோசிக்கோ

24) இவ்வோவியத்தில் வெளிப்படுத்தப்படும் பண்புகள் எவை?
வலிமை, துணிவு, மானுடஇரக்கம்,இளமை



**அருகில் உள்ள ஒளிப்படத்தை அவதானித்து விடைதருக?**

25) இவ்வோவியத்தின் தலைப்பு யாது?
இறுதித்தீர்ப்பு

26) இவ்வோவியத்தை வரைந்த கலைஞர் யார்?
மைக்கல் அஞ்சலோ

27) இவ்வோவியம் எங்கு வரையப்பட்டுள்ளது?
உரோமபுரியில் வத்திக்கான் நகர சிஸ்ரைன் தேவாலயபலிபீட பின்னால் உள்ள சுவரில்

28) இவ்வோவியம் வரையப்பட்ட நுட்பமுறை யாது?
பிரெஸ்கோ சிக்கோ

29) இவ்வோவியம் எத்தனை பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது? அவை எவை?
மூன்று,சுவர்க்கம், மனிதரின் உலகம் மறுஉலகம்

30) றாபாயெல் சன்சியோவால் வரையப்பட்ட ஓவியங்களை தருக?

❖ ஏதென்ஸ் பள்ளி

❖ புல்வெளியில் மடோனா

❖ மடோனா டெலாசேதியா

**அருகில் உள்ள ஒளிப்படத்தை அவதானித்து விடைதருக**



31) இவ்வோவியத்தை வரைந்த கலைஞர் யார்?
றாபாயெல் சன்சியோ

32) இவ்வோவியத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளவர்கள் யாவர்?
அரிஸ்டோடில், பிளேட்டோ,பைதகரஸ்,தேத்துவதனி

33) இவ்வோவியம் வரையப்பட்டுள்ள இடம் எது?
ஸ்டென்ஸாடெலா சின்னாநசுரா

34) இவ்வோவியத்திற்கு பயன்படுத்தப்பட்டுள்ள வர்ணங்கள் எவை?
கபிலவர்ணத்தின் வெவ்வேறுதன்மை,மஞ்சள்,வெள்ளை

**அருகில் உள்ள ஒளிப்படத்தை அவதானித்து விடைதருக?**



35) இவவோவியத்தை வரைந்த கலைஞர் யார்?
நாபாயெல்சன்சியோ

36) இவ்வகை ஓவியங்கள் சிலவற்றை குறிப்பிடுக?
மதுளையுடன் மனோனா,கண்ணாடியுடன் மடோனா மடோனா டொலாசேதியா

37) இவ்வோவியத்திற்கு பயன்படுத்தப்பட்டுள்ள வர்ணம் யாது?
இருண்டவர்ணம் கபிலம்,மஞ்சள்

38) இவ்வோவியத்தின் பண்புகளை குறிப்பிடுக?
முப்பரிமாணம்,தூரதரிசனம், முக்கோணமாதிரியொன்றின் மீது உணர்வு வெளிப்பாட்டுடன்

39) இவ்வோவியம் எவ்வகையான பின்னணியில் வரையப்பட்டுள்ளது?
கிராமிய பின்னணியில்

40) இவ்வோவியத்தின் ஊடாக வெளிப்படுத்தப்படும் உணர்வுயாது?
மென்மையும், இரக்கமும்

41) தற்போது எங்கு வைக்கப்பட்டுள்ளது?
பிரான்சு நாட்டு லூவர் அரும் பொருட்காட்சியகத்தில்

**அருகில் உள்ள ஒளிப்படத்தை அவதானித்து விடைதருக?**



42) இவ்வோவியம் வரைந்த கலைஞர் யார்?
றாபாயெல் சன்சியோ

43) இவ்வோவியத்தின் பெயர் என்ன?
மனோனாகடெலா சேதியா

44) இவ்வோவியம் எவ்வகையான வடிவத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது?
வட்டவடிவமான வடிவத்துள்

45) இவ்வோவியத்தின் மூலம் வெளிப்படுத்தப்படும் உணர்வுகள் எவை?
கருணையும் இரக்கமும்